அறிவியல் நகரம்
தமிழ்நாடு அரசு
காந்திமண்டபம் சாலை, சென்னை – 600 025
தொலைபேசி: 044–2952 0142 / 43
மின்னஞ்சல்: scicitychennai@gmail.com

---

**ஊரக அறிவியல் கண்டுப்பிடிப்பாளர் விருது – 2020–2021**
**விண்ணப்பப்படிவம்**

விண்ணப்பதாரரின் கடவுச்சீட்டு அளவு புகைப்படம்

Recent passport size photo of Applicant

| | | |
|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர்<br>Name of Applicant | |
| 2 | விண்ணப்பதாரரின் பிறந்த தேதி / வயது (செப்டம்பர் 30, 2020–ன்படி)<br>Applicant DOB / Age (till September 30, 2020) | |
| 3 | விண்ணப்பதாரரின் முகவரி, தொலைபேசி எண் மற்றும் அலைபேசி எண்<br>Applicant Address and contact Nos. | |
| 4 | அறிவியல் கண்டுப்பிடிப்பிற்கு வழங்கப்பட்ட பெயர்<br>Name of the Innovation | |
| 5 | அறிவியல் கண்டுப்பிடிப்பு நிகழ்த்தப்பட்ட ஆண்டு<br>Please specifythe year when the Innovation was made | |
| 6 | அறிவியல் கண்டுப்பிடிப்பு தங்கள் மரபு வழி, தொழில் நட்ப அறிவு அடிப்படையில் கண்டுப்பிடிக்கப்பட்டிருந்தால் அவற்றின் விவரம்<br>Has the Innovation been done using traditional knowledge? If yes, provide details? | |
| 7 | அறிவியல் கண்டுப்பிடிப்பினை பற்றி எழுத்துப்பூர்வமான விளக்கம் (ஒரு பக்கத்திற்கு மிகாமல்)<br>Explain in detail about the innovation (Not exceeding one page) | |

| | | |
|---|---|---|
| 8 | அறிவியல் கண்டுப்பிடிப்பினால் தமிழ்நாட்டில் மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட பயன்கள்<br>Impact of the innovation on the lives of people living in Tamil Nadu | |
| 9 | அறிவியல் கண்டுப்பிடிப்பு வேறு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலோ அல்லது அதற்காக விருது வழங்கப்பட்டிருந்தாலோ அதன் விவரம்<br>Has the Innovation been recognised by any other organization or has won awards? Please submit details? | |
| 10 | அறிவியல் கண்டுப்பிடிப்பு தனிநபரால் உருவாக்கப்பட்டதா அல்லது குழுவாக உருவாக்கப்பட்டதா என்ற விவரம்<br>Was the innovation made by an individual or a team | |
| 11 | குழுவாக இருந்தால் குழு நபர்களின் பெயர்களும் கண்டுப்பிடிப்பிற்கான அவர்களது பங்களிப்பு பற்றி விவரிக்கவும்<br>If the innovation was made by a team, the details of team members may be furnished along with the extent of their contribution towards the innovation | |
| 12 | குழுவாக கண்டுப்பிடிப்பு நிகழ்த்தப்பட்டிருந்தால், பரிசு வழங்கும் போது ஒவ்வொரு நபருக்கும் பரிசு தொகை எவ்வளவு சதவீத அளவில் வழங்கபட வேண்டும் என்பது பற்றிய விவரங்களை தெரிவிக்கவும்<br>இதற்கு குழுவின் ஒவ்வொரு நபரிடமிருந்து ஒப்புதல் கடிதம் பெற்று அதனை இணைக்கவும்<br>அவ்வாறு ஒப்புதல் கடிதம் இணைக்க தவறினால் பரிசு தொகை சரி சமமாக பிரித்து வழங்கப்படும்<br>If the innovation has been made by a team of members and in case the innovation has been selected for the award, details of share prize money to be given for each individual may be furnished.<br>A consent letter should be obtained from each individual and submitted, If not the prize money will be equally distributed among the team members. | |
| 13 | அறிவியல் கண்டுப்பிடிப்பிற்கு காப்புரிமை பெறப்பட்டுள்ளதா அவ்வாறு பெற்றிருந்தால் அதன் விவரங்களை வழங்கவும்<br>Has the innovation been patented? If, yes, please furnish details. | |

| | | |
|---|---|---|
| 14 | அறிவியல் கண்டுப்பிடிப்பிலிருந்து அறிவியல் வெளியீடுகள் பிரசுரிக்கப்பட்டிருந்தால் அவற்றின் விவரம்<br>Has any Scientific Publications emanated from the innovation? If yes, please furnish details. | |
| 15 | அறிவியல் கண்டுப்பிடிப்பினை பற்றிய மேற்கூறியவை அல்லாமல் வேறு ஏதேனும் கூடுதல் தகவல்கள் இருந்தால் அதனை தகுந்த சான்றுடன் தெரிவிக்கவும்<br>Any further information about the innovation not listed above, may be submitted with proper authentication. | |
| 16 | கண்டுப்பிடிப்பின் விவரங்கள் மற்றும் செயல்பாடுகளை சித்தரிக்கும் வண்ணம் ஒரு குறும்படம் தயாரிக்கப்பட்டு அவை குறுந்தகட்டில் பதிவு செய்யப்பட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும்.<br>The details of the innovation, its functioning should be captured in the form of a short film and submitted along with application in a compact disk. | |

கையொப்பம்

## ஊரக கண்டுப்பிடிப்பாளர் விருது – நோக்கம், தேர்வு செய்யும் முறை மற்றும் பொது நிபந்தனைகள்

### 1. ஊரக அறிவியல் கண்டுப்பிடிப்பாளர்:

ஊரக அறிவியல் கண்டுப்பிடிப்பாளர் என்பவர் ஊரகப்பகுதியை சேர்ந்தவராக இருப்பதோடு அவர்கள் மரபு வழியான தொழில்நுட்ப அறிவாற்றலோடும் புதிய கண்டுப்பிடிப்புகளை உருவாக்கும் திறன் கொண்டவராக இருக்க வேண்டும். ஊரகம் என்பது ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளைக் குறிக்கும். இது நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளுக்கு பொருந்தாது. தற்போது அறிவியல் நகரம் ''ஊரக கண்டுப்பிடிப்பாளர் விருது 2020 – 2021''–ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்களை வரவேற்கிறது.

### 2. இத்தகைய விருதுக்கான தேவை:

உலகளாவிய வேளாண் – உணவு முறைகளுக்கு உள்ள எதிர்கால சவால்கள் பெரியது. தட்ப வெப்பநிலை மாற்ற சூழலை எதிர்கொள்வதும், கடுமையான தண்ணீர் பற்றாக்குறையை சமாளிப்பதும், மண் பாழ்படுவதை கையாளுவதும், பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்துவதும் போன்ற சவால்களே அவைகள். இத்தகைய சவால்களை எதிர் கொள்ள கிராமப்புறத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் மரபுவழி தொழில்நுட்ப அறிவு அடிப்படையில் புதிய கண்டுப்பிடிப்புகளை உருவாக்கியிருக்கிறார்கள். அத்தகைய கண்டுப்பிடிப்புகள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ சமூகத்திற்கு உரிய பலனை

அளித்திருக்கின்றன. அத்தகைய கண்டுப்பிடிப்புகள் சமூகப் பார்வைக்கு தெரியாமலே சென்று மறைந்தன. ஆனால் அந்த கண்டுப்பிடிப்புகளை உரிய முறையில் அங்கீகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்வறிவியல் கண்டுப்பிடிப்புகள் தனித்தன்மை வாய்ந்ததாகவும், விலை குறைவானதாகவும் மற்றும் சமுதாயத்திற்கு பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

**3. திட்டத்தின் / விருது வழங்குவதன் நோக்கங்கள்:**

1. கிராமியப் பகுதியிலுள்ள அறிவியல் கண்டுப்பிடிப்பாளர்களை கண்டறிந்து அவர் தம் கண்டுப்பிடிப்புகளினால் சமுதாயத்திற்கு கிடைக்கப் பெறும் பயன்களை அடிப்படையாகக் கொண்டு அக்கண்டுப்பிடிப்பாளர்களை கௌரவித்தல்.
2. கிராமப்புற மக்களை, அவர்களது மரபு வழி அறிவு / மரபு வழி அறிவியல் / நாட்டுப்புற அறிவு / உள்ளூர் மீதான அறிவு ஆகியவற்றை உபயோகித்து பல அரிய புதிய கண்டுப்பிடிப்புகளை வெளிக்கொணர ஊக்குவித்தல்.
3. கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களிடையே அறிவியல் தளத்தில் உள்ள இடைவெளியை நிரப்புதல்.

**4. தேர்வு செய்யும் முறை:**

- அறிவியல் நகரம், மனித குலத்திற்கு நன்மையளிக்கும் வகையில் ஊரகப் பகுதியிலுள்ள புதிய அறிவியல் கண்டுப்பிடிப்புகள் / மரபுவழி தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை கண்டறிந்து ஊக்கப்படுத்த முயற்சியை மேற்கொண்டுவருகிறது. அத்தகைய கண்டுப்பிடிப்புகளுக்கு ‘‘ஊரக அறிவியல் கண்டுப்பிடிப்பாளர் விருது’’ வழங்கி கௌரவிக்கும்.
- வெறும் கற்பனையை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகள், இன்னும் எண்ண வடிவிலுள்ள கருத்துக்கள் மற்றும் உணர்வுபூர்வமான கருத்துக்கள் ஆகியவை இத்தேர்வுக்கு தகுதியானவை அல்ல.
- கண்டுப்பிடிப்பு புதுமையானதாகவும், தற்போதைய நடைமுறையில் உள்ளவற்றில் புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்டதாகவும், சமுதாயத்திற்கு பயனளிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
- விருதிற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கும் முன் காப்புரிமை பெற்றிருக்கலாம் அல்லது காப்புரிமைக்கு விண்ணபித்திருக்கும் நிலையிலும் இருக்கலாம்.
- இவ்விருது அறிவு சார்ந்த உடைமை எனும் பட்சத்தில், அந்த புதிய கண்டுப்பிடிப்புகள் போதிய அளவில் மேம்படுத்தப்பட்டதாகவும் மற்றும் விண்ணப்பதாரர்களுடைய சொந்த கண்டுப்பிடிப்பாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது அக்கண்டுப்பிடிப்பானது ஐந்து ஆண்டிற்கு மேல் பழமையானதாக இருக்கக் கூடாது.
- இத்தகைய அரிய கண்டுப்பிடிப்புகளின் விவரங்களை ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அந்தந்த மாவட்ட ஆட்சி தலைவர்களிடமிருந்து பெற்று பரிசீலிக்கப்படும்.

- அறிவியல் நகரம், ஊரக கண்டுப்பிடிப்புகளின் உண்மை தன்மை மற்றும் சமுதாயத்திற்கு அவற்றினால் ஏற்படும் பயன்களை மதிப்பீடு செய்ய வல்லுநர் குழுவினை அமைத்து சிறந்த கண்டுப்பிடிப்பினை தேர்வுசெய்யும்.

**5. விருதுகளின் எண்ணிக்கை:**

இரண்டு

**6. விருதிற்கான பரிசு:**

தலா ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் சான்றிதழ்

**7. விருதுவகை:**

சமுதாயத்திற்கு பயனுள்ளதும் மரபுவழி தொழில்நுட்பங்களின் அடிப்படையில் கிராமப்புற மக்களின் கண்டுப்பிடிப்புகளாக இருக்க வேண்டும்.

**8. பொது நிபந்தனைகள்:**

- விண்ணப்பதாரர்களின், முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பமிடப்பட்ட அசல் விண்ணப்ப படிவத்தை அறிவியல் நகரத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முன்மொழிந்து அனுப்ப வேண்டும்.
- விண்ணப்பதாரரின் கண்டுப்பிடிப்பிற்கான ஆவணங்கள், சான்றிதழ்கள், புகைப்படங்கள், வரிசை விளக்க வரைபடம், சோதனை அறிக்கைகள் மற்றும் கண்டுப்பிடிப்பு சார்ந்த இதர ஆவணங்கள் இருப்பின் அறிவியல் நகரத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் அவருடைய கண்டுப்பிடிப்பு வேறு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலோ அல்லது அதற்காக விருது பெற்றிருந்தாலோ அத்தகவலையும் விண்ணப்பத்தில் தெரிவிக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் அவர் தம் கண்டுப்பிடிப்புகள் பற்றி அறிவியல் பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்ட விபரங்கள், செய்தித்தாள் வெளியீடுகள், காப்புரிமை மற்றும் கண்டுப்பிடிப்பினை ஆதரிக்கும் விதமாக இதர தகவல்கள் இருந்தால் தெரிவிக்கலாம்.
- தேவைப்படும் பட்சத்தில் விண்ணப்பதாரரின் கண்டுப்பிடிப்பு செயல்படும் விதம் (working models) குறித்து குறுந்தகடு (compact disc) அறிவியல் நகரத்திற்கு குறிப்பு அனுப்ப வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் சுய தொழில் புரிந்தால், விண்ணப்பத்தில் அதனை தெளிவாக குறிப்பிட வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் நிறுவனங்களில் பணியாற்றிக் கொண்டு இருந்தால், தங்கள் விண்ணப்பத்தின் நம்பகத் தன்மையை அறிய அந்த நிறுவனத்தின் தலைவர் மூலம் விண்ணப்பம் அனுப்பிட வேண்டும். அதனுடன் நிறுவனத்தின் தலைவரால் வழங்கப்பட்ட ‘‘தடையின்மை சான்றிதழ்’’–ஐ இணைக்க வேண்டும்.

- குழுவாக செயல்பட்டு புதிய கண்டுப்பிடிப்பினை கண்டுப்பிடித்திருந்தால், குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரிடமும் ஒப்புதல் பெற்று அதனை விண்ணப்பத்தின் அசல் படிவத்துடன் இணைக்க வேண்டும்.
- விருது பெறும் கண்டுப்பிடிப்பு, ஒரு குழுவினால் கண்டுப்பிடிக்கப்பட்டிருந்தால் விருது தொகையினை சமமாக பிரித்து வழங்கப்படும். எனினும் விண்ணப்பதாரர்கள் சம பங்கு தொகையை பெற விரும்பவில்லை என்றால், சதவீத அளவில் பெறக் கூடிய விருது தொகையின் அளவை விண்ணப்பப் படிவத்தில் தெளிவாக குறிப்பிடப்படவேண்டும்.
- தவறான தகவல்கள் அளிக்கப்பட்டிருப்பது தெரியவந்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- கண்டுப்பிடிப்பினை மதிப்பிடுவதற்கு தேவைப்படும் தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை என்றால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பதாரர்கள், அறிவியல் நகர அலுவலர்களையோ, தேர்வு செய்யும் வல்லுநர்கள் குழு உறுப்பினர்களையோ தொடர்பு கொண்டு தங்களது செல்வாக்கை பயன்படுத்த எவ்வித வழிகளில் முயன்றாலும் அவர்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- அறிவியல் நகரத்தால் நியமிக்கப்பட்ட வல்லுநர்கள் குழு எந்த கண்டுப்பிடிப்பினையும் விருதிற்கு தகுதியானவை அல்ல என்று கருதினால் அவ்வருடம் விருது வழங்கப்பட மாட்டாது.
- விருதிற்காக அறிவியல் நகரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் ஆவணங்கள் எக்காரணத்தை கொண்டும் திரும்ப வழங்க இயலாது.
- விருது வழங்குவதற்கு பின்பற்றப்படும் வழிமுறைகளின் கீழ், நெறிமுறை மற்றும் வரையறைகளுக்கும் உட்படாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பத்தை நிராகரிக்க அறிவியல் நகரத்திற்கு அனைத்து உரிமையும் உள்ளது.
- விருதிற்கு தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தகவல், அஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.
- முன்மொழியப்பட்ட விண்ணப்பம் 07.03.2022 அன்று மாலை 5.00 மணிக்குள், அறிவியல் நகரம், காந்தி மண்டபம் சாலை, பிர்லா கோளரங்க வளாகம், சென்னை – 600 025 என்ற முகவரிக்கு வந்து சேரவேண்டும்.

## <u>உறுதிமொழி படிவம் 2020–2021</u>

''ஊரக அறிவியல் கண்டுப்பிடிப்பாளர் விருது 2020–21'' விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட அனைத்து விவரங்களும் சரியாகவும் முழுமையாகவும் உள்ளன என்று நான் இதன் மூலம் உறுதியளிக்கின்றேன். இவ்விருது தொடர்பாக அறிவியல் நகரம் எடுக்கும் அனைத்து முடிவுகளையும் நான் ஏற்கிறேன்.

இடம்:

நாள்:

பெயர் மற்றும் கையொப்பம்

## <u>சான்றிதழ்</u>

‘‘திரு / திருமதி _________________________ என்கிற நான் ‘‘ஊரக அறிவியல் கண்டுப்பிடிப்பாளர் விருது **2020–21**’’**–**க்காக அறிவியல் நகரத்தால் கொடுக்கப்பட்டிருக்கும் விதிகளுக்கு உட்பட்டு திரு / திருமதி ___________________________ அவர்களால் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை, முழுமையாக கண்டுணர்ந்து அனைத்தும் உண்மையானவை என்று அவர் அளித்த சான்றின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர் என்ற முறையில் சான்று அளிக்கிறேன்.

| | |
|---|---|
| தேதி: | மாவட்ட ஆட்சியர் |
| இடம்: | (கையொப்பம் மற்றும் முத்திரை) |